எடுத்துக் கொள்கின்ற நடவடிக்கையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது, ஆனால் இப்படிப்பட்ட சம்பவங்களைப்பற்றியும் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் அவர்களுடைய நடவடிக்கை பூரணமான நிலைக்குக் கொண்டுவரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம், அரசியல் காரணம் இருக்கிறது என்பதை முதலமைச்சர் யாரோ சொன்னதாகச் சொன்னதால்தான் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்பட்டுவிட்டதோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. இதிலே எந்த விதமான அரசியலுக்கும் இடம் கிடையாது, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, இதிலே அரசியலைப் புகுத்தக் கூடாது. காங்கிரஸ்காரர்கள் கதர் சட்டை போட்டால் வெளியிலே இழிவாகப் பார்க்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக நடவடிக்கை எடுப்பதற்கு உறுதிமொழி கொடுத்தால் என்னுடைய தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபடி பீதிகொண்ட பொது மக்களின் சார்பில் பணியாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு வருகிற காலிகளின் காலித்தனம் ஒடுக்கப்படும். அவர்களுக்கு எந்த வகையிலும் இடம் தாராது பார்த்துக் கொள்ளுகின்ற பொறுப்பை இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கதர் போட்டிருப்பதைப் பார்த்தாலே அருவருப்பு அடைகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். என்னுடைய சட்டை கூட கதர் மாதிரிதான் இருக்கிறது ; ஆனால் கதர் அல்ல. அப்படி அருவருப்புக் காட்டுவது காட்டுமிராண்டித்தனத்தின் அறிகுறியாகும். அதை வளரச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் துளியும் கிடையாது.

MR. SPEAKER : This adjournment motion is withdrawn with the leave of the House.

4. அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate-ல்) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கே. பார்த்தசாரதி, (2) திரு. ஜி. ராஜாராம் ஆகிய இருவரும் இப்பேரவைக்கு மீண்டும் தேர்ந்து எடுக்கப்படாத காரணத்தால், பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களுக்கு, தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

1967 ஜூலை 8] [பேரவைத் தலைவர்]

எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 12—7—1967 புதன்கிழமை காலை 11 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 12—7—1967 புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் விலகிக்கொள்ள விரும்பு கிற வேட்பாளர்கள் 13—7—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்று இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டுக்கு, மேற்படுமாயின் 15—7—1967 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் XX—தொழில்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,06,60,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss about the failure of the Government in starting adequate industries in Madurai and Ramanathapuram districts, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

THIRU K. M. RAMASWAMY GOUNDER : Sir, to discuss about the decentralisation of industries in the State and to encourage more and more medium and cottage industries, I move the following cut motion :—

'That the allotment of Rs. 2,06,60,700 under Demand No. XX—Industries be reduced by Rs. 100.'

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நெசவாளர்களும் பருத்தி உற்பத்தியாளர்களும் அதிகமாக உள்ள கோவில்பட்டி வட்டாரத்தில், எட்டயபுரத்தில் பாரதி பேரால் ஒரு கூட்டுறவு ஆலை நிறுவ வேண்டிக்கொள்ள—

"கோரிக்கை எண் XX—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,06,60,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.